



வெளியிட்டோர்:

ஸஸ்டெய்னபில் என்வைரன்மென்ட் அண்ட் ஈகோலாஜிகல் டெவலப்மென்ட் சொசைட்டி (எஸ்.ஈ.ஈ.டி.எஸ்.)
Sustainable Environment and Ecological Development Society (SEEDS)

ஏசியன் டிஸாஸ்டர் ரிடக்ஷன் ரெஸ்பான்ஸ் நெட்வொர்க் (ஏ.டி.ஆர்.ஆர்.என்.)
Asian Disaster Reduction Response Network (ADRRN)

ஏசியன் டிஸாஸ்டர் ரிடக்ஷன் சென்டர் (ஏ.டி.ஆர்.சி.)
Asian Disaster Reduction Center (ADRC)

ஆதரவளிப்பவர்:

ஜப்பானிய அரசு.
Government of Japan


# இநாமுரா நோ ஹி

ஜப்பானிலிருந்து சுனாமி
பற்றிய ஒரு கதை

## இந்துமாக்கடல் சுனாமி

2004-ஆம் ஆண்டு டிசம்பர் 26-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை, வடக்கு சுமத்திராவின் கடற்கரை அருகே கடலில் ஏற்பட்ட ஒரு பலத்த நிலநடுக்கம் காரணமாக உண்டான சுனாமி (பொங்கித் தாழும் கடலலைகள்), நகரங்கள், கடலோர சமூகங்கள் மற்றும் விடுமுறை ஒய்வுத் தலங்கள் போன்றவற்றை சேதப்படுத்தியதுடன், இந்துமாக்கடலில் உள்ள ஒரு டஜன் நாடுகளில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களையும் கொன்றது. கடந்த 40 ஆண்டுகளில் உலகில் ஏற்பட்ட மிகத்தீவிர நிலநடுக்கம் இதுதான்.



எஸ்.ஈ.ஈ.டி.எஸின் ஒரு அங்கமான சேஃப்பர் வேர்ல்ட் கம்யூனிகேஷன்ஸி"னால் இந்த புத்தகம் பதிப்பு செய்யப்பட்டது. இந்தியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் சமூகத்தினருக்கு தேவையான தயார்நிலைகள் மற்றும் பழைய நிலையை மீட்டுத் தருதல் ஆகியவற்றிற்கான தொடக்கவேலையை அடிப்படையாக கொண்டு செயல்படும் எஸ்.ஈ.ஈ.டி.எஸ்-ஏ.டி.ஆர்.ஆர்.என்- ஏ.டி.ஆர்.சி -யின் ஒரு அங்கமாக இது விளங்குகிறது. பின்வரும் தனிநபர்களின் பங்களிப்பிற்கு எங்களது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்: கதை தழுவல் - ரவ்நீத் பெய்ன்ஸ், மஞ்ஜுஷா குப்தா; மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பிற்கு தயார் செய்தவர் - லதா ஷர்மா, வி. கிருஷ்ணன்; விளக்கப்படங்கள் - நிதின் சாவ்லா.

Safer World Communications

SEEDS, D-11, Panchsheel Enclave,
New Delhi – 110017, India.
www.seedsindia.org

தமிழ்நாட்டின் சிறு கிராமம் ஒன்றில் பள்ளி மாணவர்கள் அமர்ந்துள்ள ஒரு வகுப்பறைக் காட்சி. இவர்கள் டிசம்பர் 26, 2004 அன்று மாபெரும் சுனாமியை எதிர்கொண்ட மாணவர்கள்.

"சுனாமி என்ற வார்த்தையின் பொருள் என்ன தெரியுமா?"


"ஆம், சுனாமி என்றால் மிக, மிகப் பெரிய அலை என்று பொருள். உங்களுக்குத் தெரியுமா, சுனாமி ஒரு ஜப்பானிய வார்த்தை என்று? கிழக்கே வெகு தொலைவிலுள்ள ஒரு மிகச்சிறிய நாடே ஜப்பான்."

"சுனாமி பேரலைத் தாக்குதல்களின்பொழுது புத்திசாலியும், தைரியசாலியுமான ஒரு முதியவர் 400 கிராமவாசிகளின் உயிரை எப்படிக் காப்பாற்றினார் என்பது பற்றிய கதை ஒன்றை இன்று நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன்."



முன்னொரு காலத்தில், ஜப்பானில் கடலருகே ஒரு கிராமம் இருந்தது. கிராமத்திற்கு வெகு அருகே உயரமான மலை ஒன்றும் இருந்தது. கிராமவாசிகள் அனைவரும் விவசாயிகளாவர். இவர்கள் மலைச் சரிவுகளில் நெல்லை பயிரிட்டு வந்தனர்.


மலை உச்சியில், கிராமத் தலைவர் ஹமகுச்சி வசித்து வந்தார். அவர் ஒரு புத்திசாலி. மற்றும் இரக்க சுபாவம் கொண்டவர். கிராம வாசிகள் அனைவரும் அவருக்கு மிகுந்த மரியாதை அளித்ததுடன், உதவி மற்றும் ஆலோசனை பெறவும் அவரிடம் வருவர்.



இந்த ஆண்டு, நெற்பயிர் விளைச்சல் நல்லவிதமாக இருந்தது. அவர்கள் அறுவடையை முடித்திருந்தனர். அதைச் சிறப்பாக கொண்டாடி மகிழவும் விரும்பினர்.

ஹமகுச்சியின் வயல்களிலும் நெற்கதிர்கள் கட்டுகட்டாக கட்டி வைக்கப்பட்டு, கதிரடிப்புக்கு தயாராக இருந்தன.


ஹமகுச்சியும், அவரது பேரனும் மட்டும் வீட்டிலிருந்தனர். குடும்பத்தில் மற்ற அனைவரும் அறுவடையை கொண்டாடி மகிழ கிராமத்திற்குள் சென்றிருந்தனர்!!





ஹமகுச்சி மலையிலிருந்து குனிந்து கிராமத்தைப் பார்த்தபோது திடீரென்று நிலநடுக்கத்தை உணர்ந்தார். அது பலத்த நிலநடுக்கமாக இல்லை, எனினும் மிக வித்தியாசமாக இருந்ததாக அவருக்குத் தோன்றியது.

பின், கடலும் வெகு வினோதமாக நடந்து கொள்வதை அவர் கவனித்தார். அது நிலத்திலிருந்து பின்னோக்கி தொலைவாக செல்லத் தொடங்கியது. விரைவிலேயே கடற்கரை முழுவதும் தண்ணீரே இல்லாமல் போய்விட்டது. கிராமவாசிகள் நிலநடுக்கத்தை கவனித்ததாகவே தெரியவில்லை. ஏனெனில், நெல் அறுவடையைக் கொண்டாடுவதில் அவர்கள் மும்முரமாக இருந்தனர்.



முன்பு எப்பொழுதுமே அனுபவித்திராத ஒரு புதிய விஷயமாக இதை ஹமகுச்சி உணர்ந்தார். ஆனாலும் தனது குழந்தைப் பருவ கதைகளை அவர் நினைவு கூர்ந்தார். கடல் அடுத்து என்ன செய்யப்போகிறது என்று அவருக்குப் புரிந்தது.

"ஓ! இது ஒரு சுனாமிதான்", என்று அவர் தனக்குத்தானே கூறிக்கொண்டார்.




ஆனால்... கிராமவாசிகளுக்கு இதை எப்படி தெரிவிப்பது? மிக விரைவாக யோசித்த அவர், தனது பேரனை அழைத்தார்.

"டாடா, சீக்கிரம் வா. எனக்கு ஒரு நெருப்புக் குச்சியை கொடு!"

உலர்ந்த நெற் கதிர்கட்டுகள் நோக்கி விரைந்த அவர், அவற்றிற்கு தீ வைக்கத் தொடங்கினார்.

"தாத்தா, நிறுத்துங்கள்! ஏன் இப்படி செய்கிறீர்கள்", டாடா அழத் தொடங்கினான்.



ஆனால் ஹமகுச்சி விரைவாக அனைத்து நெல் கட்டுகளிலும் தீ வைத்ததும், தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

அருகிலிருந்த ஒரு கோவிலில், தீ மூண்டதை அறிவிக்கும் பொருட்டு மணி அடிக்கத் தொடங்கியதும் கிராம வாசிகள் அனைவரும் பதறியடித்துக் கொண்டு மலைமேல் ஏறத் தொடங்கினர்.

முதலில் மலை ஏறிய இளைஞர்கள், தீயை அணைக்கும் பொருட்டு வாளி, வாளியாக தண்ணீரைக் கொட்டத் தொடங்கினார்கள். பின் தொடர்ந்த மக்களும் தண்ணீர் கொட்டி தீயை அணைப்பதில் மும்முரமாயிருந்தனர்.


ஆனால் ஹமகுச்சி அவர்களைத் தடுத்தார்.
"நெருப்பு எரியட்டும், அணைக்காதீர்கள், கிராமம் முவுவதும் இங்கே வர நான் விரும்புகிறேன்" என்றார் அவர்.

"எல்லா மக்களும் இங்கே வந்தாயிற்று?" என்றவாறே ஹமகுச்சி மலையிலிருந்து கீழே கிராமத்தைக் குனிந்து பார்த்தார்.




எரிந்து கொண்டிருந்த நெற்கட்டுகளை ஆச்சரியமாக பார்த்தவாறே கிராமவாசிகள் ஹமகுச்சியை விசாரிக்கத் தொடங்கினர் "என்ன ஆயிற்று?"

"கீழே பாருங்கள்", என்று கடலைச் சுட்டிக் காட்டினார் ஹமகுச்சி.



எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே கடல் திரும்பி வரத் தொடங்கியது. ஒரு பெரிய சுவர்போல் கடல் தண்ணீர் எழும்பி நின்றது. "இது சுனாமியே தான்", யாரோ கத்தினார்கள்.

கடலலைகள் மாபெரும் அதிர்வுடனும், இடிபோன்ற முழக்கத்துடனும் தரைமேல் மோதின. கிராமத்தை முற்றிலும் அழித்தபின், கடல் பின்வாங்கி மீண்டும் மீண்டும் தரையைத் தாக்கியது. இவ்வாறு மொத்தம் ஐந்து முறைகள் தாக்கியது.



ஆனால் கிராமவாசிகள் அனைவரும் பாதுகாப்பாக மலைமேல் இருந்தனர். எவரும் பேசவில்லை. ஒரே நிசப்தம்ஜுஅவர்கள் தங்கள் அழிந்துபோன கிராமத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்த வண்ணமிருந்தனர்.

அப்பொழுதுதான், கிராமவாசிகள் உணர்ந்தனர், மலைக்கு தங்களை அழைத்து, தங்கள் உயிர்களை காக்கும்பொருட்டே ஹமகுச்சி நெற்கதிர்களுக்குத் தீ வைத்தார் என்று.

ஹமகுச்சிக்கு என்ன சொல்லி தங்கள் நன்றியை தெரிவிப்பது என்று கிராமவாசிகளுக்குப் புரியவில்லை, அவர் முன் மண்டியிட்டு அமர்வதைத் தவிர.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, அவரின் மாபெரும் செயலுக்கென அவரை நினைவுகூறும் மக்கள், அவரது ஆத்மாவை வணங்கி வழிபட்டு தங்கள் நன்றியைத் தெரிவித்து வருகின்றனர்.






**இப்போது சுனாமி பற்றி அறிந்து கொள்வோம்...**

சுனாமி என்ருல் ஒரு பெரிய, மிகப்பெரிய கடல் அலை என்று பொருள்.

**சுனாமி ஏன் உண்டாகிறது?**

பூமியின் மேற்பரப்பு திண்ணிய தகடுகளால் ஆனது. தகடுகளின்கீழ், மிகவும் சூடாக உள்ளது. மற்றும் பாறைகள் கொதிக்கும் குழம்பாக உள்ளன. இக்குழம்பு போன்ற திரவம் அசைகையில், தகடுகளின்மேல் அழுத்தம் உண்டாகி, அவை நகர்கின்றன.



ஒரு தகடு மற்றெருரு தகட்டின் மேல் மோதுகையில், அவை ஒன்றை ஒன்று முன்னுக்குத் தள்ளுவதால், தொடர்ந்து நீண்டகாலமாக அழுத்தம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அழுத்தம் மிகவும் அதிகமாகும்பொழுது ஒரு தகடு நழுவி விழுகிறது. இதைத்தான் நிலநடுக்கம் என்கிருேம். தகடுகள் இவ்வாறு நகர்வதே சுனாமி தோன்றக் காரணமாகிறது.




**சுனாமி பற்றிய முக்கிய விவரங்கள்:**

- நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்ட பின்னர் உடனடியாக அல்லது பல மணி நேரம் கடந்து சுனாமி உண்டாகலாம்!!!
- சில நேரங்களில், கடல் தண்ணீர் பின்னோக்கிச் செல்லாமலேயே கூட இருக்கலாம்.
- சுனாமி அதிவேகமாக பயணிக்க வல்லது!!!
- முதல் கடலலை எப்பொழுதுமே மிகப் பெரியதாக இருக்காது. இரண்டாவது அல்லது மூன்ருவது அலைதான் மிகப் பெரியதாக இருக்கும்!!!

**சுனாமியிலிருந்து தப்புவதற்கு என்ன செய்ய வேண்டும் ?**

- நிலநடுக்கத்தை நீங்கள் உணர்ந்ததுமே, ஒரு உயர் பகுதிக்கு உடனடியாகச் செல்வது நல்லது !!!
- எச்சரிக்கையாய் இருங்கள்!!! கடலில் வெகு தொலைவில் நிலநடுக்கம் உண்டானால், நிலஅதிர்வை நீங்கள் உணர முடியாது, ஆனால் சுனாமி வரக்கூடும்!!!
- ஒரு சுனாமியில் வழக்கமாக ஒன்றுக்கும் மேற்பட்ட கடலலைகள் இருக்கும். எனவே, பாதுகாப்பான இடம் ஒன்றில் பலமணிநேரங்கள் தங்கியிருக்கவும்.



**உயரமான நிலப்பகுதிக்கு உடனடியாக ஓடவும்!**